சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. EP. 2/2025 in Arb.No.938/2019**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 22ம் நாள் செவ்வாய்க்கிழமை

வாதி /மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **ம.சா.1** இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீதர் | தொழில் | ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட் கலெக்ஷன் மேனேஜர் |
| தந்தை பெயர் | சேகர் | ஜாதி | |
| கிராமம் | மேல்நகர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 32 |

22.07.2025 முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனுதாரர் நிறுவனமான ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்தில் கலெக்ஷன் மேனேஜர் ஆக உள்ளேன். மனுதாரர் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நபர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். ஆவணங்கள் எதுவும் தாக்கல் இல்லை.